கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண்.126/2024

வா.சா.1 - குரூஸ்

நாள்.27.02.2026 த/பெ - மிக்கேல்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1) நான் என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாதை சம்மந்தமாக பரிகாரம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கின் சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் பணகுடி கிராமத்தில் உள்ளது. வழக்கு சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.17/1 ஆகும். வழக்கு சொத்தில் எனக்கு எவ்வளவு இடம் பாத்தியம் என்றால் 2 - 3/4 செண்ட் பாத்தியம்.

2) நான் வழக்கு சொத்தை யாரிடம் இருந்து கிரையம் பெற்றேன் என்றால் பணகுடி லூத்ரன் சபையிடம் இருந்து கிரையம் பெற்றேன். எந்த வருடம் கிரையம் பெற்றேன் என்றால் 27.05.1992 அன்று கிரையம் பெற்றேன். 1,2 பிரதிவாதிகள் தாயும், மகளும் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் கீழ்பக்கம் 1,2 பிரதிவாதிகள் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கு பாதை சம்மந்தமாக புலைவரபடங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த லூத்ரன்சபை மனை பிரித்து கொடுத்ததற்கான அங்கிகாரம் பணகுடி பேரூராட்சியிடம் பெறவில்லை என்றால் சரிதான். மேற்படி பாதை சம்மந்தமாக பணகுடி பேரூராட்சிக்கு மேற்படி லூத்ரன் சபை ஆவணம் ஏதும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான்.

3) இவ்வழக்கில் நான் வில்லங்க சான்று ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியாக ஞாபகம் இல்லை, வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். எந்த வருடம் வீடு கட்டினேன் என்றால் 1995 ஆண்டு கட்டினேன். 1,2 பிரதிவாதிகள் எப்போது வீடு கட்டினார்கள் என்றால் நான் வீடு கட்டி 3 வருடங்கள் கழித்து வீடு கட்டினார்கள். நான் வீடு கட்டுவதற்கு பணகுடி பேரூராட்சியில் அங்கிகாரம் பெற்றேனா என்றால் மனு கொடுத்தேன் ஆனால் அங்கிகாரம்



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.27 01:48:59 +0530

கிடைக்கவில்லை. நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் மீன் வியாபாரம் செய்கிறேன். 1, 2 பிரதிவாதிகளும் மீன் வியாபாரம் செய்கிறார்கள் என்றால் சரிதான். மீன் வியாபார போட்டியினால் 1, 2 பிரதிவாதிகளுக்கும், எனக்கும் எவ்வித பேச்சுவார்த்தையும் இல்லை என்றால் சரிதான். நானும், 1,2 பிரதிவாதிகளும் ஒரே சமூகத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 4 ஆண் மக்கள் ஆவார்கள். என்னுடைய மகன்கள் என்ன வேலை பார்க்கிறார்கள் என்றால் கூலி வேலை பார்க்கிறார்கள். 2 ம் பிரதிவாதி ஜெனோவாவின் கணவருக்கு எந்த ஊர் என்றால் இடிந்தகரை ஆகும்.

4) 2 ம் பிரதிவாதியின் கணவரும் மீன் வியாபாரம் செய்கிறார் என்றால் சரிதான். என் வீட்டின் கீழ் பக்கம் சுவரில் ஜன்னல் இல்லை என்றால் சரியல்ல, ஜன்னல் உள்ளது. என் வீட்டின் கீழ் பக்கம் கழிவு குழாய் ஏதும் அமைக்கவில்லை என்றால் சரிதான், பாதையில் ஏதும் அமைக்கவில்லை. நான் வீடு கட்டும் சமயம் நிலத்தை அளவீடு செய்து எல்கை நிர்ணயம் செய்து தான் வீடு கட்டினேன் என்றால் சரிதான். மேற்படி நிலத்தை அளவீடு செய்து எல்கை நிர்ணயம் செய்ததது சம்மந்தமாக வருவாய் துறை அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் முறையாக வருவாய் துறையை வைத்து அளந்து வீடு கட்டாததால் தான் இவ்வழக்கு தாவா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5) நான் வீடு கட்டுவதற்கு முன்பாகவே 1,2 பிரதிவாதிகள் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சொத்தை பொறுத்து என் பெயரில் பட்டா ஏற்படவில்லை என்றால் சரியல்ல, பட்டா எண்.87 ஆகும். பட்டா வழங்கும் சமயம் வருவாய்துறையால் அளவீடு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டதா என்றால் சரிதான், கிராம நிர்வாக அலுவலரால் அளவீடு செய்யப்பட்டது. 2 ம் பிரதிவாதியின் கணவர் உடல்நிலை சரியில்லாமல் தற்போது வீட்டில் தான் உள்ளார் என்றால் சரிதான். எனது வீடு எந்த திசை நோக்கி உள்ளது என்றால் வடக்கு நோக்கி வாசல் உள்ளது. எனது வீட்டை சுற்றி காம்பவுண்ட் உள்ளதா என்றால் உள்ளது. அவ்வாறு காம்பவுண்ட் சுவர் அமைப்பதற்கு அனுமதி வாங்கினேனா என்றால் என் வீட்டை சேர்த்துதான் காம்பவுண்ட் சுவர் அமைந்துள்ளது.

(1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்கள் குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.27 01:49:07 +0530